பாடம் – 6

# திருச்சபை
# THE CHURCH

ஒரு மனிதன் பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற்றவுடன், அவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுகிறார் (1கொரி. 6:11). ஆகையால், சுவிசேஷம் மீது உள்ள விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் அவர் தேவனுடைய குமாரனாக மாறுகிறார்.

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திர ராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்து வுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே" (கலா. 3:26-27)

ஒரு கிறிஸ்தவன், "புது சிருஷ்டி; பழையவை கள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2கொரி. 5:17) நினைவில் கொள்வோம். கிறிஸ்தவன் பாவத்திற்கு மரித்தவன் (பழையவை கள் ஒழிந்து போயின) பாவ மனிதன் மரணத்துக் குட்படுத்தப்பட்டு மீண்டும் பிறந்தான் (யோ.3:1-7)

"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4)

இந்த சமயத்தில், அடிக்கடி கேட்கப்படும் கேள்வி, "அப்படியானால் நான் இப்பொழுது பாவம் செய்தால் என்ன நடக்கும்? நான் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா?" அதில் என்னவென்றால், ஒரு மனிதன் ஞானஸ்நானத்திற்குப் பின், ஒருவர் செய்யும் எந்த பாவத்தையும் விட்டு மனந்திரும்பி, அதை தேவனிடத்தில் அறிக்கையிட்டால், "பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோ.1:9) நாம் எல்லாவற்றிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறோமா என்ற எல்லா பிரயாசத்தோடும் முயற்சி செய்யும் மிக முக்கியமான கடமை நமக்கு உண்டு.

"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்" (1யோ. 1:7)


மற்றொரு விதத்தில் சொல்வோமானால், நாம் (ஞானஸ்நானத்திலே) அவருடைய இரத்தத்தோடு தொடர்பு கொள்ளும்போது, நாம் தேவனைப் பிரியப்படுத்த எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் அவருடைய இரத்தம் தொடர்ந்து நம்மை சுத்திகரிக்கும். அதாவது அன்பான கீழ்ப்படி தலினால் அவருடைய சத்திய வழியில் நடக்கையில்...

மற்றொரு ஆசீர்வாதம் என்னவென்றால் கர்த்தர் இப்படி இரட்சிக்கப்பட்ட மக்களை திருச்சபையில் சேர்க்கின்றார். (அப். 2:47)

திருச்சபை என்றால் என்ன? அது மனிதன் உண்டாக்கிய ஒரு ஸ்தாபனம் அல்ல. வேதாகமம் அதை கிறிஸ்துவின் சரீரம் (உடல்) என்று சித்தரிக்கிறது. இந்த சரீரமாகிய மீட்கப்பட்ட மக்களை விலைக்கு வாங்கும் தொகையை கொடுப்பதற்காக இயேசு மரித்தார். அவர் தன்னுடைய சொந்த இரத்தத்தின் மூலம் இதை விலைக்கு வாங்கினார் (அப். 20:28). இந்த திருச்சபை அவருக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஏனென்றால், அவர் இதை ஊட்டம் கொடுத்து வளரச் செய்கிறார். (எபே. 5:29)

எபேசியருடைய புஸ்தகம் திருச்சபையைக் குறித்தும், இயேசுவிற்கும் அதற்கும் உள்ள தொடர்பைக் குறித்தும் குறிப்பிடுகின்றது.

"எல்லாவற்றையும் அவருடைய பாதங்க ளுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லா வற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23) என்று பவுல் தேவனைப் பற்றிக் கூறுகிறார்.



மேலும் அவர், இயேசுதான் "சபைக்குத் தலைவர்" என்றும், "சரீரத்தின் இரட்சகர்" என்றும் கூறுகிறார் (எபே. 5:23). பின்பு பவுல் சபையைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் பல காரியங்களைக் கூறுகிறார்.

"புருஷர்களே! உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல் லாமல் பரிசுத்தமும் பிழையற்றது மான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே. 5:25-27)

இயேசு நம்முடைய பாவங் களுக்காக சிலுவையில் மரித்தார். நம்மை நேசித்ததினால் மாத்திரம் அல்ல. அவர் நம்மை கிறிஸ்தவர் களாய் வளர்ந்து முதிர்ச்சியும் அடைய விரும்புகிறார் என்பது எளிமையாக நம்மால் பார்க்க முடிகின்றது. அதே போல், வசனத்தில நம்மால் எத்தனை திருச்சபை இருந்தது என்பதை எளிமையாக பார்க்க முடிகிறது. ஆம். ஒரு தலை (கிறிஸ்து) அதற்கு ஒரே ஒரு சரீரம் (திருச்சபை). இந்த ஒரே உண்மையை பவுல், "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" (எபே. 4:4) இது சரியான விளக்கத்தை நமக்குக் கொடுக்கிறது. உண்மைதானே! மனிதர்களாகிய நமக்கு கூட ஒவ்வொருவருக்கும், ஒரு சரீரத்திற்கு ஒரு தலைதானே இருக்க முடியும்.

அதே போல், திருச்சபை முழுவதற்கும் (ஒரே சபை) இயேசுவே தலைவர், புதிய ஏற்பாட்டில், "சபை" என்ற வார்த்தை இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது, ஒரு வகையில் விசுவாசிகள் எல்லாரையும் கொண்டதாக எபேசியர் புத்தகத்தில் சொன்னபடி குறிக்கிறது. ஆனால் அநேக நேரங்களில், இது தேவனுடைய ஜனங்களடங்கிய பிராந்திய (Local) சபையையே குறிக்கும். அதாவது "தெசலோனிக்கேயில் உள்ள சபை" (1தெச. 1:1). தனிப்பட்ட எல்லா தேவ ஜனமாகிய பிராந்திய (Local) சபைகளும் சேர்ந்து முழுமையான ஒரு திருச்சபையாகும். ஆனால் ஒவ்வொரு பிராந்திய சபையும் பூமியில் ஒவ்வொரு இடங்களில் உள்ள கிறிஸ்துவின் திருச்சபையாகும்.

அப்படியானால், எத்தனை வகையான சபைகள் உள்ளன? வேதாகமம் ஒரே ஒரு சபையைப் பற்றிதான் சொல்கின்றது. நினை விருக்கட்டும். எந்த இடத்தில் இருந்தாலும் சரி. கிறிஸ்து வினுடைய 'சரீரம்' ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று எபே. 4:4ல் சொல்லப் பட்டுள்ளது. ஆனால், இதற்கு நேர்மாறாக, இன்று அநேக பெயர்களுடன் பல சபைகளை ஒருவர் பார்க்க முடியும். இந்த மதப்பிரிவுகள் பைபிளில் இருந்து வந்தவை அல்ல. யாரோ ஒரு மனிதனோ அல்லது ஒரு மனிதக்கூட்டமோ இவைகளை ஆரம்பித்தனர். ஆனால் ஆண்டவர் ஒரே ஒரு சரீரத்திற்குத்தான் தலைவர். பவுல் எழுதுகிறார், "நாம் யூதராயினும், கிரேக்கரா யினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப் பட்டோம்" (1கொரி. 12:13)

நாம் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றவுடன், ஆண்டவர் நம்மை அவருடைய சபையில் சேர்க்கின்றார். ஆனால் நாம் நிறைய தவறான வழிமுறைகளையும், எண்ணங்களை யும் அதனுடன் சேர்த்து விட்டோம். பைபிளில் சொல்லப்பட்ட சத்தியங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய இலக்கானது "ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தி இருக்க வேண்டும்" (1கொரி. 1:10)

கொரிந்துவிலே, கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் பிரிந்தபோது, பவுல் அவர்களை ஆவிக்குரியவர் களாய் இல்லாமல் மாம்சத்திற்குரியவர்களாய் இருப்பதைக் குறித்து குற்றப்படுத்தினார்.

"ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?" (1கொரி 3:4)

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்ட வர்கள் அனைவரும் அவருடைய சரீரத்திலே ஒன்றாயிருக்கிறார்கள். இந்த ஒற்றுமையைப் பற்றிதான் இயேசு ஜெபித்தார் (யோ. 17:20,21) மேலும் இதைத்தான் எல்லா விசுவாசிகளும் விரும்புகின்றனர். முரண்பாடான நோக்கங்க ளுடைய வித்தியாசப்பட்ட ஆவிக்குரிய அமைப்பு களில் நாம் இடம்பெறவில்லை. ஒரு சரீரம், ஒரு சபைதான் உண்டு. யூதர்கள் மற்றும் புறஜாதி களும் கூட (ஒருவரை ஒருவர் எதிர்த்தவர்கள்) இப்பொழுது இந்த ஒரே சரீரத்தின் அங்கத்தினர் கள் தான்.

பின்வரும் வாக்கியங்களைப் பாருங்கள் ; "ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள் அக்காலத்திலே காணியாட்சிக்குப் புறம்பானவர் களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ் வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்க ளென்று நினைத்துக் கொள்ளுங்கள்.

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தி னாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரை யும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து" (எபே. 2:11-14)

இப்பொழுது, எங்குமிருக்கும் எல்லா மக்களும் (பணக்காரரோ - ஏழையோ ; கறுப்போ-வெள்ளையோ ; ஆணோ - பெண்ணோ) சபையில் ஒன்றாக இருக்க முடியும் (கலா. 3:27-28). இப்படியே சொல்லிக்கொண்டு போகும்போது பவுல், சபையானது ஒரு இரகசியம் என்றும், அது கால காலமாய் மறைந்திருக்கிறது என்றும், இப்பொழுதோ எல்லாருக்கும் தெரியவந்திருக்கிறது என்றும் கூறுகின்றார் (எபே. 3:1-7)

பாருங்கள்! உலக ஆரம்பம் முதல் திட்டமிடப் பட்ட இந்த ஆவிக்குரிய இராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பது என்பது என்ன ஒரு பாக்கியம். "ஒருவர் தேவனுடைய பிள்ளையென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள்" (1 யோ. 3:1)

மாறாக, நமக்குப் பல பொறுப்புகள் உள்ளன. முதலாவதாக, பாவங்கள் கழுவப்பட்டபின், நம்மை நாமே சுத்தமாய் வைத்துக் கொள்ள தேவையான எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும் (1யோ. 3:3). இரண்டாவது, மறுபடியும் பிறந்த நாம் ஆவிக்குரிய வகையிலே வளர வேண்டும் (1பேதுரு 2:2). இப்படி வளரும்போது, நாம் இந்த முழு சரீரமாகிய சபையானது, சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே" (எபே. 4:16)

நீங்கள் ஏற்கனவே சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிந்தவர்களானால், நீங்கள் சபையில் ஒரு அவயவமாய் இருக்கும் ஆசீர்வாதம் பெற்றவர்கள். அடுத்து வரும் 2 பாடங்களில் நாம், ஆராதனை மற்றும் கிறிஸ்தவ ஜீவியம் பற்றிப் பார்ப்போம்.